# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1903 - 2015 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2015.02.20

*1903 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 198 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 204 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப் பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவ ராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப் படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவர்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்ட ரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு 6,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பங்கள் 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

டபிள்யூ. கே. டீ. விஜேரத்ன,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழுவின்
செயலாளருக்காக.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2015, சனவரி 22.

## அட்டவணை

1. காலி.- காலி மாவட்டத்தின் காலி நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப் பங்களைக் கோருகின்றது.

2. கொழும்பு மேற்கு.- கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட தெஹிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெபிலியான, மஹரகமை, பன்னிபிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்களுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

3. மாத்தளை.- மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை நீதிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

4. கம்பஹா.- கம்பஹா, அத்தனகல்ல, மீரிகம, மஹர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

5. ஹற்றன்.- நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் நீதிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ்**

**....................................... பிரதேசத்துக்கான காதிப் பதவி**

1. முழுப்பெயர் :
2. முதலெழுத்துக் களுடன் பெயர் :
3. நிரந்தர முகவரி :
4. அஞ்சல் முகவரி :
5. பிறந்த திகதி :
6. வயது :
7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இலக்கம் :

11. கல்வித் தகைமைகள் :

12. தொழில் தகைமைகள் :

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீங்கள் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீர்களா ? :

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? :

23. உங்களுக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

உங்களைப் பற்றி நன்கறிந்துள்ள உங்களது தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| (1) பெயர் : | (2) பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உங்களையறிந்துள்ள காலப் பகுதி : | உங்களையறிந்துள்ள காலப் பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ..............................,

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

*2-501*

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

### இலங்கைக் கணக்காய்வு சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கான நேரடி ஆட்சேர்ப்புக்கள் - 2014 (2015)

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கான கணக்காய்வு அத்தியட்சகர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 10% இற்கு மேற்படாத எண்ணிக்கையான 8 வெற்றிடங்கள் கீழே 2 இல் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிரப்பப்படும்.

2. **தகைமைகள்**.- பின்வரும் ஏதேனும் நிறுவனமொன்றின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து அதில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும் :

(i) இலங்கையின் அல்லது இங்கிலாந்தின் மற்றும் வேல்சின் பட்டயக் கணக்காளர் நிறுவனம் ;

(ii) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் ;

(iii) ஐக்கிய இராச்சியத்தின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கம் அல்லது அதற்குச் சமமான தொழில்சார் நிறுவனம்.

**குறிப்பு**.- எந்தவொரு பரீட்சையினதும் பெறுபேற்றை எதிர்பார்த் துள்ளோர் விண்ணப்பிக்க முடியாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது எஸ்எல்-1, ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூ. 53,555 ஆகும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன்படி சம்பளம் செலுத்தப்படும்.

4. **வயதெல்லை**.- 2015, பெப்புருவரி 20 ஆந் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **தேக ஆரோக்கியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள்** :

(அ) சகல பரீட்சார்த்திகளும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பாடு டையவராதல் வேண்டும் ;

(இ) இப்பதவிக்காக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2004 இன்படி சேவையில் இணைந்து குறித்த பிரகாரம் இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(ஈ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையது மான பதவியாவதுடன் தெரிவுசெய்யப்படும் மூன்றாண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு இச்சேவையில் நியமிக்கப் படுவர். இந்த ஆட்சேர்ப்புக்கு முன்னர் அரசாங்க சேவையில்/ உள்ளூராட்சி சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்திற்கு உரித்துடைய பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர் என்ற அடிப்படையில் மீண்டும் நியமிக்கப் படுகின்ற முதலாவது சந்தர்ப்பத்தில் ஒரு ஆண்டு பதிற்கடமை காலத்திற்கு உட்பட்டு நியமனம் மேற்கொள்ளப்படும் ;

(உ) அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தகுதிகாண் காலம்/பதிற்கடமைக் கால முடிவில் குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார்.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறையின் பிரகாரம் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும். அப்புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரை என்பவற்றிற்கமைய அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

| | |
|---|---|
| (அ) தொழில்சார் தகைமை : | உச்ச அளவு புள்ளிகள் 25 |
| (i) அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய சம மான பூர்த்திசெய்த தொழில் சார் தகைமைகளுக்காக (ஒரு தொழில்சார் தகைமைக்கு 5 புள்ளிகள்படி) | 15 புள்ளிகள் |
| (ii) மேலே குறிப்பிடப்பட்ட துறைக்கு மேலதிகமாக ஏனைய துறைகளிலி ருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட தொழில்சார் தகைமை களுக்காக | 10 புள்ளிகள் |
| (ஆ) கல்விசார் தகைமைகள் : | உச்ச அளவு புள்ளிகள் 20 |
| (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிடமிருந்து பெற் றுக்கொள்ளப்பட்ட முதுமானிப் பட்டம் (கணக்காய்வு/கணக் கியல்) | 20 புள்ளிகள் |
| (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிடமிருந்து பெற் றுக்கொள்ளப்பட்ட முதுமானிப் பட்டம் (ஏனைய துறைகளில்) | 15 புள்ளிகள் |

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (ஏனைய துறைகளில்) — 10 புள்ளிகள்

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட பட்டம் :

(i) முதலாம் வகுப்பில் தேர்ச்சி — 08 புள்ளிகள்

(ii) இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் தேர்ச்சி — 07 புள்ளிகள்

(iii) இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில் தேர்ச்சி — 06 புள்ளிகள்

(v) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண சித்தியுடனான பட்டம் : — 05 புள்ளிகள்

(இ) *கணினி அறிவு :* — *உச்ச அளவு புள்ளிகள் 10*

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் — 10 புள்ளிகள்

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா — 08 புள்ளிகள்

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப் பட்ட கணினி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் (6 மாதங்களுக்கு குறையாததும் 1 ஆண்டிற்கு மேற்படாதது மான கற்கைநெறி/1,500 மணித் தியாலங்களுக்குக் குறையாத) — 06 புள்ளிகள்

(iv) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணினி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் (6 மாதங்களுக்கு மேற் படாததும் 3 மாதத்திற்கு குறையாத துமான கற்கைநெறி/720 மணித் தியாலங்களுக்குக் குறையாத) — 04 புள்ளிகள்

(v) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன் றினால் வழங்கப்பட்ட கணினி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் (2 வாரங்களுக்கு குறையாததும் 3 மாதத்திற்கு மேற் படாததுமான கற்கைநெறி 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத) (பெற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த பட்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) — 03 புள்ளிகள்

**குறிப்பு.**- விண்ணப்பதாரரினால் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஒரு கலாநிதிப் பட்டம் அல்லது முதுமானிப் பட்டம் அல்லது பட்டப்படிப்பு அல்லது பட்டப் பின்படிப்பு கற்கைநெறி மேலே (ஆ) (iv), (ஆ) V, (ஆ) VI என்பவற்றில் குறிப்பிடப்பட்டவை கல்விசார் தகைமை களாகவும் (இ) i, (இ) ii இல் குறிப்பிடப்பட்டவை கணினி அறிவு தொடர்பான தகைமைகளாகவும் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) *அனுபவம் :* — *உச்ச அளவு புள்ளிகள் 20*

(விண்ணப்பதாரரினால் அடிப் படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் எதிர்பார்க் கப்பட்ட 2 ஆண்டுகள் சேவைக் காலத்தின் பின்னரும் சம்பந்தப் பட்ட துறையின் சேவை தொடர் பாக அடைந்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 புள்ளிகள் வீதம்)

(உ) *விசேட திறன்கள் :* — *உச்ச அளவு புள்ளிகள் 10*

(i) வளவாளர்களாகச் செயற் பட்டிருத்தல் — 03 புள்ளிகள்

(ii) வெளியிடப்பட்ட செயற்திட்ட அறிக்கை, ஆராய்ச்சி அறிக்கை மற்றும் தொழில்சார் அல்லது கல்விசார் புத்தகங்கள் — 05 புள்ளிகள்

(iii) நேர்முகப் பரீட்சைக் குழு ஏற்றுக் கொள்கின்ற ஏனைய திறன்கள் — 02 புள்ளிகள்

(ஊ) *ஆங்கில மொழித் தேர்ச்சி :* — *உச்ச அளவு புள்ளிகள் 10*

(i) ஆங்கில மொழி மூலம் பெறப் பட்ட பட்டம் அல்லது முதுமானிப் பட்டம் — 10 புள்ளிகள்

(ii) அரசாங்கத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன மொன்றிடமிருந்து வழங்கப் படுகின்ற ஓராண்டிற்கு மேற் படாத டிப்ளோமா பாடநெறி (1,500 மணித்தியாலத்திற்குக் (குறையாத) — 08 புள்ளிகள்

(iii) அரசாங்கத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன மொன்றிடமிருந்து வழங்கப் படுகின்ற ஓராண்டிற்கு மேற் படாததும் 06 மாதங்களுக்கு குறையாததுமான சான்றிதழ் பாடநெறி (720 மணித்தியாலத் திற்குக் (குறையாத) — 06 புள்ளிகள்

(iv) அரசாங்கத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவன மொன்றிடமிருந்து வழங்கப் படுகின்ற 06 மாதங்களுக்கு மேற்படாததும் 03 மாதங்க ளுக்கு மேற்படாததும் 03 மாதங்களுக்குக் குறையா ததுமான சான்றிதழ் பாடநெறி (360 மணித்தியாலத்திற்குக் (குறையாத) — 05 புள்ளிகள்

(எ) நேர்முகப் பரீட்சையின்போது காட்டுகின்ற திறமைகள் : உச்ச அளவு புள்ளிகள் 05

நேர்முகப் பரீட்சையின்போது காட்டு கின்ற தொடர்பாடல் மற்றும் முன் வைத்தல் திறமைகளுக்காக

மொத்தம் — உச்ச அளவு புள்ளிகள் 100

7. **விண்ணப்பிக்கும் முறை**.- இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட் டிருக்கும் மாதிரி படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை என்ற இடத்திலுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கீழே குறிப்பிடப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 2015, மாச்சு 18
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 2015, மாச்சு 25

விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்ற கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் "இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நேரடி ஆட்சேர்ப்புக்கள்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

அரச/மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினால் தங்களின் விண்ணப்பப்படிவங்கள் அவர்களுடைய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியினை விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் முடிவுத் திகதிக்கு முன்னர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவமும் அது தொடர்பான ஏனைய ஆவணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கல்லாது திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பலாகாது.

**குறிப்பு**.- தபாலில் தொலைந்துபோதல் அல்லது தாமதமடைதல் என்பது தொடர்பான எந்த முறைப்பாடுகளும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப் பங்களைத் தாமதப்படுத்திய விண்ணப்பதாரியே அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் பொறுப்பானவராவார்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பங்களைப் பொறுப்பேற்ற இறுதித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்படும். அவ்வாறான அறிவித்தல் கிடைக்காவிடின் அது பற்றி உடனடியாக "கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இலக்கம் 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.

9. பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை அல்லது அனைத்தினையும் வேண்டுகையில் அவற்றினை அல்லது அனைத்தையும் விண்ணப்பதாரி சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) தொழில்சார் மற்றும் ஏனைய தகைமை தொடர்பான சான்றிதழ்கள் ;
(iii) நன்நடத்தை தொடர்பாக குறிப்பிடப்படும் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ;
(iv) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்திய அதிகூடிய பரீட்சை சான்றிதழ் ;
(v) இலங்கைப் பிரசையாதல் பரம்பரை ரீதியிலா அல்லது பதிவினூடாகவா என்பது தொடர்பான தகவல்கள்.

10. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தாபன ஒழுங்குவிதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகளும் இப்பதவிக்குப் பொருந்தும்.

11. விண்ணப்பதாரி தகைமையற்றவர் எனக் காணப்பட்டால் நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும்போது அல்லது நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் தேவையான சந்தர்ப்பத்தில் அவருடைய விண்ணப்பதாரி என்ற தன்மை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட விபரங்கள் அவர் அதனை பிழையானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் என நிரூபிக்கப்பட்டால் இல்லாவிடின் அவர் ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுள்ளது.

12. அனைத்து வெற்றிடங்களையும் அல்லது அதில் ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்குரிய தீர்மானம் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்).

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துவை வீதி,
பத்தரமுல்லை.
2015, பெப்புருவரி 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கான
கணக்காய்வு அத்தியட்சகர் பதவி -
நேரடி ஆட்சேர்ப்பு- 2014 (2015)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
   (ii) முழுப்பெயர் :----.

2. (i) நிரந்தர விலாசம் :----.
   (ii) தொலைபேசி இலக்கம் :

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. (அ) பால் : ஆண்/பெண் :----.

   (ஆ) திருமணமானவரா, திருமணமாகாதவரா, விதவையா என்பது :----.

5. (i) பிறந்த திகதி :

   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

   (ii) 2015, பெப்புருவரி 20 ஆந் திகதியன்று வயது-

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. (i) நீங்கள் இலங்கைப் பிரசையாவது வம்சாவழியினாலா ? அல்லது பதிவின் மூலமா ? :----.

   (ii) தேசிய இனம் :
   சிங்களவர்/தமிழர்/இந்திய தமிழர்/முஸ்லிம்

7. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

| நிறுவனம் | பெற்றுக்கொள்ளப் பட்ட தகைமை | அத்தகைமை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி |
|---|---|---|
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |
| ......................... | ......................... | ......................... |

8. தற்பொழுது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

   (அ) பதவி :----.
   (ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.
   (இ) நியமிக்கப்பட்ட திகதி :----.
   (ஈ) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா, இல்லாவிடின் ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது : ----.
   (உ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா என்பது :----.
   (ஊ) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் :----.
   (எ) தற்பொழுது பெற்றுக்கொள்ளும் வருடாந்த சம்பளம் :----.

9. சித்தியடைந்துள்ள அதிகூடிய பரீட்சை :

   சிங்களம் :----.
   தமிழ் :----.
   ஆங்கிலம் :----.

10. உங்களைப் பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு நபர்களின் பெயர்களையும் விலாசத்தையும் குறிப்பிடுக :

   (i) ..........................................................................................
   (ii) ..........................................................................................

11. ஏனைய தகவல்கள் இருந்தால் அவை :.......................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் உறுதிமொழிகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிந்துகொள்ளப்பட்டால் நான் தகைமையின்மைக்கு உள்ளாகுவேன் எனவும் நியமிக்கப் பட்டதன் பின்னர் அதுபற்றி தெரிந்துகொள்ளப்பட்டால் எதுவித இழப்பீடும் செலுத்தப்படாது நான் சேவையிலிருந்து நீக்கப் படுவேன் எனவும் நான் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/ செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்துள்ளேன் எனவும், 2015 .................. மாதம் ............................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டுள்ளார் எனவும் நான் வெளிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

இடம் :----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் அவர் தொடர்பாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ............... எனும் பெயருடைய விண்ணப்பதாரர் 2015, ........................... ஆந் திகதியிலிருந்து இந்த அலுவலகத்தில் சேவையாற்றி வருகின்றார் எனவும் அவரின் வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியாக உள்ளது எனவும் விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தர மாக்கப்பட்டுள்ளார் எனவும், மேலே 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங் களின் உதவியோடு நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்துள்ளேன் எனவும் அவை சரியானவை எனவும் 2012 ............................ மாதம் ................................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
அரசாங்க/மாகாண அரசாங்க
நிறுவனத் தலைவரின் அல்லது அவரின்
அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

2-648

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மகளிர் அலுவல்கள் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2014 (2015)

மகளிர் அலுவல்கள் அமைச்சின், மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளரினால் 2015, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2015.03.16 ஆந் திகதி ஆகுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சை ஒழுங்குமுறை.-** இவ்வினைத்திறன் காண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது :

பாட இலக்கம் 1 - நிதிப் பிரமாணம்/ அலுவலக நடைமுறை (காலம் : 2 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

பாட இலக்கம் 2 - ஆண்/பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

பாட இலக்கம் 3 - சமூக விஞ்ஞானமும் உளவியல் ஆலோசனையும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

**குறிப்பு :**

(அ) அலுவலர் ஒருவர் சகல பாடங்களுக்கும் ஒரே அமர்வில் தோற்றுவதற்கு அல்லது தனித்தனியாக வெவ்வேறு அமர்வுகளில் தோற்றுவதற்கான அனுமதி உண்டு.

(ஆ) சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு வினாத்தாளும் கட்டாயம் பதிலளிக்கவேண்டிய வினாக்களைக் கொண்டிருக்கும் :

3. **பாடங்கள் :**

3.1 பகுதி A - நிதிப்பிரமாணம்
இலங்கையின் அரசாங்க முகாமைத்துவ ஒழுங்கமைப்பு
நிதிக் கட்டுப்பாடும் வருடாந்த மதிப்பீடும்
(அரசாங்க நிதிப் பிரமாணங்கள் I ஆம் தொகுதியின் X ஆம் அத்தியாயத்தைத் தவிர)

பகுதி B - அலுவலக நடைமுறை
தாபன விதிக்கோவையின் கட்டளைகள்
அலுவலக முகாமைத்துவமானது, தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களில் உள்ளடங்குகின்றது :
(I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII)

3.2 ஆண்/பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் :
பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள்
இலங்கை சமூகத்தில் ஆண்/பெண் சமூக அந்தஸ்து
இலங்கை பெண்கள் பிரகடனமும் பெண்களின் உரிமைகளும்

3.3 சமூக விஞ்ஞானமும், உளவியல் ஆலோசனையும் :
கிராமிய சமூக விஞ்ஞானம்
இலங்கையில் நகரமயப்படுத்தல்
கிராம அபிவிருத்தி
உளவியல் ஆலோசனையின் அடிப்படை அம்சங்களும் ஒழுக்கநெறிகளும்
பெண்களும் உளவியல் முறைகேடுகளும்
இலங்கையின் ஆலோசனை அமைப்பும் ஆலோசனை வாய்ப்புகளும்

4. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். இந்த விண்ணப்பப்படிவமானது A4 அளவான தாளில் இலக்கம் 1 முதல் 6 வரையும் முதல் பக்கத்திலும் ஏனைய பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளவாறு தயார் செய்யப்படல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது சொந்தக் கையெழுத்தில் இதனை நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தயார்செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கு எற்புடையதாவதுடன், விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலகமாயின் பிரதேச செயலாளர் ஊடாக) 2015.02.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக் கொள்கை தொடர்பான நடவடிக்கைக்காக புதிய அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் அல்லது தாம் சேவையாற்ற ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள மொழிமூலத்திற்கு அமைவாக தமிழ் மொழியில்/ஆங்கில மொழியில் தயார்செய்து சமர்ப்பிக்க முடியும்.

6. (i) விண்ணப்பதாரர்களுக்கான அனுமதிச்சீட்டுக்கள் அனுப்பப் பட்டவுடன், அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் குறித்த அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லையாயின், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்கு ஏற்புடையதாயின், பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த அபேட்சகராயின், உங்களது மேற்படி விபரங்களை அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும் ;

(ii) அபேட்சகர்கள் பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டுள்ள அனுமதிச்சீட்டைக் கையளித்தல் வேண்டும் ;

(iii) ஒரு அபேட்சகருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவ தானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாகக் கருதப்படலாகாது.

7. **ஆளடையாளம்**.- அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி யிடம் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வெளியிடப் பட்டுள்ள செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

மேற்படி ஏதேனுமொரு ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர் ஒருவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச்செய்வ தற்கு அல்லது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்**.- இந்தப் பரீட்சைக்குத் தோன்றும் அபேட்சகர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படும் :

| | | பரீட்சைக் கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| (அ) | முதல் தடவைக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை | - |
| (ஆ) | முதல் தடவையின் பின்னர் முழுப் பரீட்சைக்கும் | 400.00 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 200.00 |

பரீட்சைக் கட்டணமானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளரிடமும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும். அதன் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்தை எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

9. (i) இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக நிர்ணயித்துள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் உட்படுகின்றனர். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் குறித்த ஆள் உட்படுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றும் சகல அபேட்சகர்களினதும் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை மகளிர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

10. இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு, தமது திணைக்களம்/அலுவலகத்திலுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்கள/அலுவலகத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்குதல் வேண்டும்.

11. இதில் குறிப்பிடப்படாத யாதாயினுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பில் மகளிர் அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் விருப்பத் திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
மகளிர் அலுவல்கள் அமைச்சு.

மகளிர் அலுவல்கள் அமைச்சு,
5 ஆம் மாடி,
"செத்சிறிபாய", 2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**மகளிர் அலுவல்கள் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014 (2015)**

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR WOMEN DEVELOPMENT OFFICERS OF MINISTRY OF WOMEN'S AFFAIRS - 2014 (2015)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் :----.
(முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்)
உதா : GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முதலெழுத்துக்களின் மூலம் குறிப்பிடும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. அலுவலக முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :

3.1 பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமானவரா ?/திருமணமாகாதவரா என்பது-
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு : மாதம் : திகதி :

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி (2015.03.16) வயது :-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. மகளிர் அலுவல்கள் அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள திகதி (கட்டாயமாக கடமைகளைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிட வேண்டும்.) :----.

5. அரச கரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்கள் தொடர்பில் முன்னதாகவே இணைந்துள்ளவரா ? அல்லது புதிதாக இணைந்தவரா ? :----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாயின் அலுவலகத்தின் பெயர்) :----.

7. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் தோற்றுகின்ற பாடங்களும் பாட இலக்கங்களும் :

| பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|
| 1. ......................................<br>2. ......................................<br>3. ...................................... | |

8. இந்தப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகின்றீரா ? :----.

9. பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையாக அல்ல எனின் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :----.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கே உறுதியாக ஒட்டவும்.

(பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருக்கவும்.)

10. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளதென்பதை தெரியப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் விதிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் தமது திணைக்கள தலைவரின் முன்னிலையில் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும், நான் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திருமதி/செல்வி ..................................... ............ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிசெய்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரிசீலனை செய்யப் பட்டுள்ளதெனவும் அவை உண்மையானவை என்றும், உரிய பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும், விண்ணப்பதாரி முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார் எனவும்,

(ii) அபேட்சகர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்றும் உறுதி செய்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்.)

பதவிப் பெயர் :----.
திகதி :----.

*2-525*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.